HR14-2-3-TA

# சிருஷ்டிப்பில் படிப்படியாக பார்க்கலாம்- நிகழ்ச்சி 3

**அறிவிப்பாளர்:** இன்றைக்கு ஜான் அன்கேர்பெர்க் நிகழ்ச்சியில், அறிவியலின் காரணமாக தங்களுடைய கிறிஸ்தவ விசுவாசத்தை கைவிட்டவர்களின் கேள்விகளுக்கு இன்று பதிலளிக்க இருக்கிறோம். ஏதோவொரு கட்டத்தில் நீங்கள் இன்றைய நவீன அறிவியலாவது சிருஷ்டிப்பை பற்றிய வேத பதிவிகளுடன் ஒப்பிட இயலாதென்று நினைக்கிறீர்கள். ஆனால் இந்த தொடரில் சமீபத்திய அறிவியல் ஆய்வுகள் உங்களை விசுவாசத்திற்கு நேராக நடத்துவதற்கான ஆதாரங்களை பார்க்க இருக்கிறோம். அதோடு, மற்ற கேள்விகளுக்கும் பதிலளிக்க இருக்கிறோம், இயற்கையின் சாதனைகள் வேதத்தின் பதிப்பில் இருக்கிறது என்ற எதிர்பார்ப்புடன் இருக்க வேண்டியது அவசியமா?

**டாக்டர். வால்டர் கெய்சர்:** எதிர்பார்ப்பு அவசியம் தான், ஏனென்றால் காரணகர்த்தா ஒருவர்தானே. அதாவது, ஒரு குறிப்பிட்ட கட்டிட கலைஞரால் கட்டப்பட்ட ஒரு கட்டிடத்தையும் அவர் கட்டிய வேறொரு கட்டிடத்தையும் பார்க்கும்போது, நீங்கள், இது பிரான்க் லாயிட் ரைட் கட்டிடம் என்பீர்கள்." இந்த பிரபஞ்சத்தை பார்க்கும் போது, அது தேவனால் உண்டாக்கப்பட்டது. அது எல்லாவற்றிலும் இருப்பது, “மேட் இன் USA அல்ல ஆனால், “ஜீவனுள்ள தேவனால் உண்டானது என்றிருக்கிறது.” நீங்க வசனத்தை பார்த்தாலும், அதுவும் தேவனிடத்தில் இருந்து வந்ததுதான். இதன், காரணகர்த்தா ஒருவரே. இரண்டையும் உண்டாக்கியது ஒருவரே. இதன் வியாக்கியானங்கள் மாறுபடலாம், ஆனால் ஆதாரங்கள் மாறாது, மூல குறிப்புகள் மாறாதவைகள். அதே தேவனிடத்திலிருந்து தான் ஆதி தகவல்கள் வருகிறது. இல்லாவிட்டால் சிருஷ்டிப்பின் உபதேசத்தை நாம் தூர எரிந்திருப்போம். அப்படியில்லாவிட்டால் நாம் தேவ ஆவியினால் அருளப்பட்ட, தேவ வார்த்தையை புறக்கநித்திருப்போம். எதையும் நம்மால் புறக்கணித்திட முடியாது. அவை இரண்டும் ஜீவனுள்ள தேவனிடமிருந்து வருகிறது.

**அறிவிப்பாளர்:** இன்றைக்கு எனது விருந்தினர் வானியலாளரான டாக்டர். ஹக் ராஸ் டொரான்டோ பல்கலைகழகத்தில் வானியலில் பிஹெச்டி பெற்றவர், கேல் டேக்கில் விண்மீன் திரள் ஆராய்ச்சியில் டாக்டர் பட்டம் பெற்றவர். அவர் பல புத்தகங்களையும் எழுதியிருக்கிறார், அவருடைய சமீபத்திய புத்தகம், நேவிகேடிங் ஜெனிசிஸ். அதோடு நாம் எபிரேய பண்டிதரான டாக்டர். வால்டர் கேயசருடைய வார்த்தைகளையும் கேட்க இருக்கிறோம், இவர் உலகிலேயே பழைய ஏற்பாடு மற்றும்

எபிரேய மொழியில் அதிக அறிவாற்றல் உடைய நபராக பலரால் கருதப்படுபவர். எங்களோடு இணைந்து இந்த நிகழ்ச்சியில் எப்படி சிருஷ்டிப்பின் பதிவை கொண்டுள்ள ஆதியாகமம் 1 மற்றும் 2 நவீன அறிவியல் கண்டுபிடிப்புகளுடன் ஒத்துப்போகிறது என்பதை கேட்டு அறிந்துகொள்ளுங்கள் இது ஜான் அன்கேர்பெர்க் நிகழ்ச்சி

*****

**டாக்டர். ஜான் அன்கேர்பெர்க்:** நிகழ்ச்சிக்கு உங்களை வரவேற்கிறோம். இன்றைக்கு ஒரு அருமையான தலைப்பு உங்களுக்காக காத்திருக்கிறது. நமது விருந்தினரான வானியலாளரும் வானியர்பியலாளருமான Dr. ஹக் ரோஸ், வேதாகமத்தையும் அறிவியளைபற்றியும் பேசிக்கொண்டிருக்கிறார். இரண்டும் பொருந்தக்கொடியதா? ஏற்புடையதா? அது எப்படி?

இந்த நிகழ்ச்சியில் நாம் ஒரு நாளின் அளவைக்குரித்து பார்க்க இருக்கிறோம். 6 சிருஷ்டிப்பின் நாட்களாக இருக்கிறது ஏழாம் நாளில் தேவன் ஓய்ந்திருக்கிறார். இந்த ஒவ்வொரு நாட்களின் அளவு எவ்வளவு? இதை நாம் புரிந்துகொள்வதற்கு, அந்த பகுதியிலேயே சிலகுறிப்புகள் கொடுக்கப்பட்டுள்ளது. நாம் ஏற்கனவே சொன்னது போல அவை ஒரு நீண்ட காலத்தை கொண்டிருக்கிறது என்பதை ஏற்றுக்கொள்கிறோம். நாம் என்ன பார்க்கப்போகிறோம் என்றால், இது ஆறாம் நாளுக்கும் பொருத்தமானதாக, இருக்கிறதா, ஆதாமும் ஏவாளும் உருவாக்கப்பட்ட நாள்? இந்த நாளில் பத்து விஷயங்களை நாடன்ததையும் தேவன் இந்த நாளில் தாம் செய்த அனைத்து காரியங்களின் தகவல்களையும் கொடுத்திருக்கிறார் என்பது உங்களுக்கு தெரியுமா? வெல், அவை அனைத்தையும் நாம் பார்க்க இருக்கிறோம்.

சரி, ஹக், நாம் வேத வார்த்தைகளில் இருந்து துவங்கிடலாம். வேதாகமம் சொல்லுகிற காரியங்களை கேட்கும் போது ஜனங்கள் உண்மையில் ஆச்சரியப்படுவார்கள். ஆறாம் நாளில் என்ன நடந்தது என்பதை குறித்து பேசிக்கொண்டிருக்கிறோம். ஆதியாகமம் 2:8ல் கூறுகிறது, “தேவனாகிய கர்த்தர் கிழக்கே ஏதேன் என்னும் தோட்டத்தை உண்டாக்கி, தாம் உருவாக்கின மனுஷனை அதிலே வைத்தார்.” இந்த வசனம் என்ன சொல்கிறது?

**டாக்டர். ஹக் ராஸ்:**..வெல், ஆதாம் தோட்டத்திற்கு வெளியில் தான் இருந்தான் தேவன் அவனை தோட்டத்தில் கொண்டுவந்து விட்டார். எனவே ஆதாமுக்கு தோட்டத்திற்கு வெளியில் இருந்த உலகம் மற்றும் தோட்டத்திற்கு உள்ளே தேவன் செய்திருப்பவைகளுக்கும் வித்தியாசத்தை காணும் சிலாக்கியம் கிடைத்தது. இவையனைத்ஹ்டும் அவனுக்கு விளக்கமாக புரிந்திருக்கும், அதாவது, இந்த தேவன் என்மேல் கரிசனையுடையவராக என்ன நேசிக்கிரவராக இருக்கிறபடியால் தான்இந்த அழகான தோட்டத்தை நான் அனுபவிக்கும் படியாக உண்டாக்கியிருக்கிறார். அதனால, இதுதான் முதல்,

திறவுகோலாக நான் பார்க்கிறேன். அதனால் தான் தேவன்  மரணம் முள்ளும் குறுக்கும் முளைப்பிக்கும் என்று சொன்னபோது அவை எப்படி இருக்கும் என்பதை,  ஆதாம் நன்கு அறிந்திருப்பான், ஏனென்றால் அவனுக்கு ஏதேன் தொட்டத்திருக்கு வெளியில் இருக்கும் உலகம் எப்படிப்பட்டதென தெரியும்.

**ஆன்கர்பெர்க்:** யா, அப்பா இந்த தோட்டம் ஒரு விசேஷமான ஒரு இடம்தான். மேலும் 15ம் வசனம் சொல்கிறது, “தேவனாகிய கர்த்தர் மனுஷனை ஏதேன் தோட்டத்தில் அழைத்து கொண்டுவந்து வைத்தார்.”

அவர் அவனை அதை பண்படுத்தவும் காக்கவும் அங்கே வைத்தார். இந்த வார்த்தைகளில் பல விஷயங்கள் இருக்கிறது. இங்க என்ன நடக்கிறது?

**ராஸ்:** ஆதியாகமம் 1 ரை பார்க்கும்போது, தேவன் இயற்கையான காரியங்களை உண்டாகியத்தை குறித்து சொல்லப்பட்டுள்ளது. ஆதியாகமம்  2ல் தேவன் தாம் உண்டாக்கிய காரியங்களை ஒவ்வொன்றாக மனிதனுக்கு அறிமுகப்படுத்துகிறார், அதோடு ஒவ்வொரு சிருஷ்டிப்போடும் எப்படி தொடர்புகொள்வது என்பதையும் அவனுக்கு கற்றுத்தருகிறார். ஆதியாமம் 1ல் 3 விதமான ஜீவன்களை குறித்து சொல்லப்பட்டிருப்பதை பார்க்கமுடியும்: முற்றிலும் இயற்கையான ஜீவன்கள், சரீரமும் ஆத்துமாவையும் உடைய ஜீவன்கள், அதற்கு பிறகு விசேஷமான ஒரு  ஜீவன் மட்டுமே சரீரம், ஆத்துமா ஆவியோடு இருக்கிறது. இந்த 15ம் வசனத்தில் தேவன் ஆதாமுக்கும் முற்றிலும் இயற்கையான சிருஷ்டிப்பை தான் முதலில் அவனுக்கு அறிமுகம்செய்கிறார், அந்த இயற்கையான சிருஷ்டிப்புடன் எப்படி செயல்படுவதென்றும் கற்றுக்கொடுக்கிறார்.

**ஆன்கர்பெர்க்:** ஆல்ரைட், அடுத்த வசனத்தில் தேவன் கூறுகிறார், “தேவனாகிய கர்த்தர் பார்வைக்கு அழகும் புசிப்பிக்கு நலமுமான சகலவித விருட்சங்களையும் தோட்டத்தின் நடுவிலே ஜீவவிருட்சத்தையும், நன்மை தீமை அறியத்தக்க விருட்சத்தையும் பூமியிலிருந்து முளைக்கப்பண்ணினார். இது நமக்கு என்ன சொல்கிறது?

**ராஸ்:** வெல், தேவன் மரங்களுக்கு கொடுத்திருக்கும் வடிவமைப்பை ஆதாமினால் கான முடிந்த்தத்து என்பதை நமக்கு எடுத்துரைக்கிறது. அந்த மரங்களின் வளர்ச்சியை ஆதாம் கவனித்ததை இந்த வசனம் கூறுகிறது. எனவே இந்த மரங்களை பராமரிக்க அவன் என்ன செய்யவேண்டும் என்பதை அறிகிறான், அதோடு தேவன் தாம் உண்டாக்கிய விருட்சங்களின் மூலமாக தன்னை எப்படி போஷிக்கிறார் என்பதையும் புரிந்துகொள்கிறான். ஒரு விஞ்ஞானியாக, இது என்னை வியப்படைய செய்தது, இந்த விருட்சங்கலஜம் நிறைவான உற்பத்திதான். டார்வேனியன் கண்ணோட்டத்தின் படி மரங்கள் இப்படி பரிபூரணமான

உணவை கொடுக்கும் என்பது எதிர்பார்க்கப்படாத ஒன்று, ருசியானதாக உணவு, பலவிதமான அழகான உணவுகள் கிடைக்குமா. ஆனால் ஆதாம் கற்றுக்கொண்ட ஒரு விஷயம் தான் இது. “இந்த மரங்களை எல்லாம் நான் உனக்காக கொடுத்திருக்கிறே, பாரிபூரனமானதாக உனக்கு கொடுத்திருக்கிறேன், நீ ஆனந்தமாக அனுபவிக்கும் படியாக உனக்கு வேண்டிய சகலத்தையும் கொடுத்திருக்கிறேன் என்கிறார்.” அதாவது, எல்லா உணவினுடைய நிறமும் பிரவுன் நிறத்தில் இருந்தால் எப்படியிருக்கும்? எல்லா உணவும் கார்ட்போர்ட் சுவையாக இருந்தால்? அப்படி எதையும் பார்க்கவில்லை. இந்த பல ராகங்கள், பலவிதமான வண்ணங்களில், மனிதர்களா ஆனந்தமாக இருக்க தேவையான அனைத்தும் இருக்கிறது.

**ஆன்கர்பெர்க்:** யா, என்னக்கு என்ன தோன்றுகிறது என்றால், ஒரு மரம் வளர்வதை கவனித்திருந்தால், எத்தனை நிமிடங்கள் அதை கவனித்துகொண்டிருப்பீர்கள்?

**ராஸ்:** வெல், பல வருடங்கலாகும்.

**ஆன்கர்பெர்க்:** யா, அதாவது, அது ஒரு நீண்ட காலமாக இருந்திருக்கும். அதற்க்கு பிறகு அவன் தோட்டத்திற்குள் வர தேவன் அவனுக்கு வேலையை கொடுக்கிறார். அவனை சுற்றிலும் இந்த அழகான இடம்  சூழ்ந்திருக்கிறது வேதம் சொல்கிறது, “தேவனாகிய கர்த்தர் மனுஷனை ஏதேன் தோட்டத்திற்கு அழைத்துக்கொண்டுவந்து அதை பண்படுத்தவும் காக்கவும் வைத்தார்.”

**ராஸ்:** ரைட். இங்கு என்ன நடக்கிறதென்றால் தேவன் ஆதாமுக்கு அறிவுரை கூறுகிறார், “நான் உனக்கு ஒரு வேலையை கொடுத்திருக்கிறேன். இது சந்தோஷமான வேலையாக இருக்கும்.” இப்போது ஆதாம் இயற்கையான சிருஷ்டிப்புகளுடன் தொடர்புகொல்கிறான், மரங்கள் செடிகள் மற்றும் அவை உர்ப்பத்திசேதிடும் உணவுகள் மற்றும் பூக்கள். இந்த தோட்டம் தேவனால் நடப்பட்டபடியால், தேவன் உண்டாக்கியவைகளோடு நிச்சயம் ஆதாம் ஆனந்தமாக இருந்திருப்பான் என நம்புகிறேன்.  இன்னும் பல விஷயங்களையும் தேவன் அவனுக்கு அங்கு கற்றுக்கொடுக்கிறார்.

**ஆன்கர்பெர்க்:** யா, அடுத்த பகுதி இன்னும் சுவாரஸ்யமாக இருக்கும். இன்னமும், நாம ஆறாவது நாளில்தான் இருக்கிறோம். “பின்பு தேவனாகிய கர்த்தர், வயதான இந்த மனுஷனாகிய ஆதாம் தனிமையாயிருப்பது நல்லதல்ல. ஏற்ற துணியை அவனுக்கு உண்டாக்குவேன் என்றார்.” தேவனாகிய கர்த்தர் வெளியின் சகல மிருகங்களையும் ஆகாயத்து சகலவித பறவைகளையும் மண்ணினாலே உருவாக்கி. ஆதாம் அவைகளுக்கு எண்ணிய பேரிடுவான் என்று பார்க்கும்படி அவனிடத்தில் கொண்டுவந்தார். அந்தந்த

ஜீவஜந்துக்களுக்கு ஆதான் எந்தெந்தப் பேரிட்டானோ அதவே அதற்க்கு பேராயிற்று.” இப்ப, இதை செய்வதற்கு ஆதாமிற்கு எவ்வளவு காலமாகியிருக்கும்?

**ராஸ்:** வெல், ஐந்தாம் நாளிலும் ஆறாம் நாளிலும் தேவன் உண்டாக்கிய நிருகங்களை இது குறிக்கிறது.

இவை வெறும் சரிரத்தை மட்டும் உடைய மிருகங்கள் அல்ல, அவை தேவனால் அருளப்பட்ட உணர்வுகளை கொண்டிருந்தது, அதற்க்கு விருப்பமிருந்தது, அதோடு, அறிவாற்றளிருன்தது, மனிதர்களோடு சகஜமாக பலகும்படியாகவும் அவர்களை பிரியப்படுத்தும் படி நடந்துகொல்லும்படியாகவும் உண்டாக்கப்பட்டிருந்தது. இப்போது தேவன் ஆதமிடம் சொல்லுகிறார், “இந்த வித்தியாசமான ஜந்துக்களோடு நீ பழகும்படி விரும்புகிறேன், உன்க்கு சேவை செய்யும்படி உன்னை பிரியப்படுத்தும் படி எப்படி அவைகளை உண்டாக்கியிருக்கிறேன் என்று பார்த்து, அவைகளுக்கு ஏற்ற பேரிடு.” இதில், புரிந்துகொள்ள வேண்டிய காரியம் என்னவென்றால் ஆதாமுக்கு மர்ச்செடிகள்மீது கொடுக்கப்பட்டிருந்த அதிகாரத்தோடு இப்போது மிருக ஜீவன்கள் மீதும் அவனுக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது, இது ஆதாமுக்கு நல்ல சந்தர்ப்பமாக இருந்திருக்கும் அதாவது, “இந்த மிருகங்கள் எல்லாம் அந்த செடிகொடிகளை விட அதிகமாக தன்னோடு தொடர்புகொள்ளக் கூடியதாக இருக்கிறது என்பதை அறிந்திருப்பான்.” தோட்டத்தை பண்படுத்துவதில் இருந்த சந்தோஷத்தை விட,  இப்போது அதிக சந்தொச்தத்தி அவன் நிறைவாக அனுபவித்திருப்பான் ஏனென்றால் இப்போது சரீரப்ரகாரமாக மட்டுமல்ல, உணர்வுபூர்வமாம, அறிவுபூர்வமாக அவனுக்கு ஒரு தொடர்ப்பு உண்டாகியிருக்கிறது.

**ஆன்கர்பெர்க்:** யா, இந்த காரியங்களை குறித்து பார்க்கும்போது தேவன் இந்த நேபிஷ் மிருகங்களை உண்டாக்கினார். அதனுடைய அர்த்தம் என்ன? அதாவது, இன்றைக்கு இதை பார்த்துக்கொண்டிருப்பவர்களில் அநேகருக்கு, நாய்கள் மிகவும் பிடிக்கும். அவங்களுடைய பூனையை பிடிக்கும். அதாவது, சில கல்லறைகளில் ஒரு நபர் அடக்கம்பண்ணப்பட்ட இடத்திற்கு பக்கத்தில் நாய்களின் படங்கள் இருப்பதை பார்க்கிறோம். என்ன சொல்லவருகிறேன், என்றால் சிலருக்கு தங்கள் விலங்குகளுடன் இப்படிப்பட்ட ஒரு பிணைப்பு காணப்படுகிறது. மற்ற விலங்குகளுக்கு அதிக ஆர்வம் காண்பிக்க மாட்டோம். சிலர் அப்படியிருக்கிறார்கள். ஏனப்படி? நேபிஷ் என்ற வார்த்தை எதை குறிக்கிறது?

**ராஸ்:** வெல், நேபிஷ் என்பது நம்மோடு பழகி நம்மை பிரியப்படுத்தும்படி தேவன் உண்டாக்கிய விலங்குகளை குறிக்கிறது, மனிதர்களாகிய நம்மோடு உணர்வுபூர்வமாக ஐக்கியப்படுவது. இந்த விலங்குகளை பற்றிய மறுக்க முடியாத விஷயம், அவை நம்முடனேயே இருக்க விரும்பிடும். அதாவது, பாவம் என்ற விஷயத்தையும், தாக்கிடும் என்ற விஷயத்தையும் ஒதுக்கிடுங்கள், இந்த விலங்குகள் அதிக ஆற்றலோடு நம்மோடு பழகவும் தியாகத்தோடு பணிவிடை செய்திடவும் நம்மை பிரியப்படுத்தவும்

உண்டாக்கப்பட்டுள்ளது. இது ஆதாமிற்கு பெரிய பொழுதுபோக்காக இருந்திருக்கும் என நினைக்கிறேன். இப்போது தேவன் சொல்கிறார், “இதோ, இன்னும் அதிகமானவைகளை உண்டாக்கியிருக்கிறேன். இந்த நேபிஷ் ஜீவன்கள் பலதரப்பட்ட வகைகளில் ஆயிரக்கணக்காக இருக்கின்றது. ஒவ்வொன்றும் வித்தியாசமான விதத்தில் உங்களை பிரியப்படுத்தும் படி உண்டாக்கப்பட்டுள்ளது. எனவே இது ஆதாமுக்கும் நிச்சயம் பிரமாண்டமான ஒரு படைப்பாக காணப்பட்டிருக்கும், அதாவது, “அவையனைத்தும் வித்தியாசமான விதங்களில் மனிதர்களோடு பழகி அவர்களை பிரியப்படுத்தும் படி உண்டாக்கப்பட்டிருக்கிறது.” அவற்றிலிருந்து அவன் ஒரு நிறைவான உணர்வை அடைவதாக காணப்படுகிறது. ஆனால் உண்மையில் இதற்கு ஒரு குறிப்பிட்ட நேரம் ஆகியிருக்கும், ஏனென்றால் இந்த ஒவ்வொரு ஜீவஜந்துக்களையும் தெரிந்துகொள்ள நேரமேடுத்திருக்கும், ஒவ்வொரு ஜீவா ஜந்துக்களும், நமக்கு பணிவிடை செய்ய நம்மை பிரியப்படுத்தை தனித்தன்மையோடு உண்டாக்கப்பட்டுள்ளது. உதாரணத்திற்கு யோபுவின் புஸ்தகத்தில், 38ம் அதிகாரம் மற்றும் 39ம் அதிகாரங்களில், அதிக விளக்கமாக சொல்லப்பட்டிருப்பதை, பார்க்க முடியும், உதாரணமாக, குதிரையையும் கழுதையையும் பார்த்தால், இரண்டும் ஒன்று போலவே காணப்பட்டாலும், இரண்டும் முற்றிலும் வித்தியாசமான விதத்தில் நம்மோடு தொடர்புகொள்கிறது.

**ஆன்கர்பெர்க்:** யா, இதை, கேட்டுக்கொண்டிருக்கிற நீங்கள் எத்தை காலமாகியிருக்கும் என நினைக்கிறீர்கள் அதாவது தான் என்ன செய்கிறோம் என்பதை புரிந்துகொள்ள ஆதாமுக்கு எவ்வளவு மனிநேரங்கலாகியிருக்கும், ஏனென்றால் இது அனைத்தும் ஒரு நாள் யோம் தானே, ஆல்ரைட்? இப்போது ஒரு இடைவேளை. நாம் திரும்பி வந்ததும் ஒரு முக்கியமான விஷயத்தை பேசிட இருக்கிறோம், அதுதான் இன்றைகுரித்து, அதாவது தேவன் ஆதாமிடம் ஏவாளை கொண்டுவருகிறார். நீங்கள் தொடர்ந்து இணைந்திருங்கள் மீண்டும் வரும்போது இதை குறித்துதான் பார்க்க இருக்கிறோம்.

*****

**ஆன்கர்பெர்க்:** ஆல்ரைட், மீண்டும் வருக. நாம் வானியலாளரும் வானியர்பியலாளருமான டாக்டர் ஹக் ராசுடன் பேசிக்கொண்டிருக்கிறோம். ஆதியாகமத்தின் நாட்களின் அளவை குறித்து பேசிக்கொண்டிருக்கிறோம். வேதாகமம் தன்னிலே தானே நமக்கு அளித்திடும் தகவல்களில் இருந்து அதனுடைய அளவை நமக்கு எடுத்துரைக்கிறது. ஆதாமையும் ஏவாளையும் தேவன் உண்டாக்கின ஆறாம் நாளில் நடந்த காரியங்களை குறித்து பார்த்துக்கொண்டிருக்கிறோம். இதுவரைக்கும் ஏவாளை பற்றி நாம் பார்க்கவில்லை, ஆதாமிற்கு நடந்த சம்பவங்களை பற்றிதான் இதுவரை பார்த்துக்கொண்டு வருகிறோம். இப்போது ஏவாள் உள்ளே வருகிற சம்பவத்தை பார்க்க இருக்கிறோம். இவையனைத்தும் ஒரே நாளில் நடக்கிறது. வேதம் என்ன சொல்கிறது என்று பார்ப்போம்: தேவன் ஆதாமிற்கு இந்த விலங்குகளுக்கு

பேரிடும் வேலையை கொடுத்தார், வசனம் 20 கூறுகிறது, “அப்படியே ஆதாம் சகலவித நாட்டு நிருகங்களுக்கும் ஆகாயத்து பறவைகளுக்கு சகலவித காட்டுமிருகங்களுக்கும் பேரிட்டான்.” அதற்கு பிறகு சொல்கிறது,  “ஆதாமுக்கோ ஏற்ற துணை இன்னும் காணப்படவில்லை.” இதை, தேவன் அறிந்துகொண்டார். இப்ப என்ன நடக்கிறது?

**ராஸ்:** வெல், தேவன் உண்டாக்கின இந்த மிருகங்கள், பல ஆயிரக்கணக்கான விதங்கள், அவைகளுக்கு உணர்வு இருக்கிறது, விருப்பமுண்டு, தெரிந்துகொள்ளும், அறிவு இருக்கிறது, ஆனால் அவைகளுக்கு ஆவியில்லை. அஆதாம் ஒன்றை அறிந்துகொண்டான், “சரி, என்னால் அவைகளோடு சரீரப்ரகாரமாக தொட்டு பழக முடியும். உணர்வுபூவமாகவும் தொடர்புகொள்வேன், அறிவுபூர்வமாகவும், விருப்பப்படியும் இருக்கமுடியும். ஆனாலும் ஏதோவொன்று குறைவுபடுகிறது. என்னிடம் இருக்கும் ஏதோவொன்று அவைகளிடம் இல்லை, அதுதான் ஆவி.” அதனால் ஆதாம் தேவன் தனக்குள் தொடர்புகொள்ளும்படி வைத்த அனைத்து விதங்களிலும் தொடர்புகொள்ள ஏற்ற ஒன்றிற்க்காக ஏங்கினான்.

**ஆன்கர்பெர்க்:** அடுத்த பகுதியில் வேதம் நமக்கு சொல்கிறது, வசனம் 21, “தேவனாகிய கர்த்தர் ஆதாமுக்கு அயர்ந்த நித்திரையை வரப்பண்ணினார். அவன் நித்திரையடைந்தான். அவர் அவன் விழா எலும்புகளில் ஒன்றை எடுத்து அந்த இடத்தை சதையினால் அடைத்தார். தேவனாகிய கர்த்தர் தாம் மனுஷனில் எடுத்த விழா எலும்பை மனுஷியாக உருவாக்கி.” இந்த பகுதியில் சொல்லப்படுகிறது, “அவளை அவர் மனுஷனிடத்தில் கொண்டுவந்தார்.” அப்ப என்ன நடந்தது?

**ராஸ்:** எபிரேய பத்தத்தில் என்ன பார்க்கிறீர்கள் என்பதை இப்ப சொல்லுங்க ‘ஹப்பா அம’. பழைய ஏற்ப்பாட்டில் 20 முறைகள் பயன்படுத்தப்பட்டுள்ளது, நீண்ட இறுதியான  என்று பெரும்பாலும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. இப்போது தேவன் இந்த பூமியில் சிருஷ்டித்த எல்லாவற்றிலும் உச்சக்கட்டமான ஒன்றை ஆதாமிடம் அறிமுகப்படுத்துகிறார், சிறப்பானதை கடைசியாக கொண்டுவருகிறார். இப்போது ஆதாம், பல மாதங்களை களித்திருப்பான், தோட்டத்தில் வேலை செய்ததும் மற்றும், மிருகங்களுடன் நேரம் செலவிட்டதும், விலங்குகளுக்கு பேரிட்டதும், தோட்டத்தின் மீதும் மற்ற ஜீவா ஜந்துக்கள் மீதும் அதிகாரம் செலுத்த பல வருடங்கலாகாமல் இருந்திருக்கலாம். இப்போது இந்த ஜீவன் அவனுக்கு முன்பாக வர அவன், “இறுதியாக, தேவன் நான் தொடர்புகொள்ளும்படி எனக்குள் வைத்த அனைத்து ஆற்றலுடன் முழுமையாக செயல்பட ஏற்ற துணியை உருவாக்கினார் என்றான்.”

**ஆன்கர்பெர்க்:** யா, தேவன் மனுஷியை மனுஷனிடத்தில் கொண்டுவந்தபோது, “அப்பொழுது ஆதாம், இவள் என் எலும்பில் எலும்பும் என் மாம்சத்தில் மாம்சமுமாயிருக்கிறாள். இவள் மனுஷனில் இருந்து எடுக்கப்பட்டபடியால் இவள் மனுஷி எனப்படுவாள். இதினிமித்தம் புருஷன் தன தகப்பனையும் தாயையும் விட்டு தன மனைவியோடே இசைந்திருப்பான். அவர்கள் ஒரே மாம்சமாயிருப்பார்கள். ஆதாமும் அவன் மனைவியும் நிர்வாணிகளாயிருந்தும் வெட்கப்படாதிருந்தார்கள்.” இங்கு என்ன நடக்கிறது?

**ராஸ்:** வெல் இந்த வசனத்தில் இன்னொரு விஷயத்தையும் நாம் கவனிக்க வேண்டும் தேவன் ஏவாளை ஆதாமுக்கு துணையாக கொடுக்கிறார், உதவியாளர், இது சரியான மொளிபேயப்பாக எனக்கு தோன்றவில்லை. இதற்காக எபிரேய வார்த்தை “ஈசெர்’. அதற்கு அர்த்தம், “உனக்கு ஒரு ராணுவ நட்பை கொண்டுவருகிறேன்.” இது ஆதாமுக்கு நேரடியாக ஒன்றை வெளிப்படுத்துகிறது, ஓகே, “தேவன் இந்த அருமையான தோட்டத்தில் சந்தோஷமாக இருக்க இந்த மிருகங்களையும் மரங்களையும் இப்போது இந்த மனுஷியையும் கொடுத்திருக்கிறார். இங்கு நான் வாழ்க்கையை அனுபவிக்க மட்டும் இல்லை. தேவன் என்னக்கு ஒரு வேலையை கொடுத்திருக்கிறார்.” ஏவாளை ஒரு ராணுவ நட்பு என்று சொல்லும்போது, அவர் மனுஷன் மனுஷி இருவருக்கும் ஒன்றை சொல்லுகிறார், உங்களுக்கு ஒரு வேலை இருக்கிறது, உங்களுக்கு ஒரு நோக்கம் இருக்கிறது அதற்காகத்தான் சிருஷ்டிக்கப்பட்டிருக்கிறீர்கள்.

**ஆன்கர்பெர்க்:** இந்த காரியத்தை குறித்து சில நிமிடங்கள் பார்க்கலாம். தேவன் ஆதாமையும் ஏவாளையும் தேவ சாயலில் சிருஷ்டித்திருக்கிறார். அதனுடைய அர்த்தம் என்ன?

**ராஸ்:** வெல், நமக்கு சரீரம் ஆத்துமா ஆவி இருக்கிறது. இப்ப, மனுதனுடைய ஆத்துமா ஆவியிலிருந்து பிரிக்கபடதக்கது என்று நினைக்க வேண்டாம், என்ன சொல்லுகிறது என்றால், அதாவது, தேவனிடத்தில் இந்த 3 தன்மைகளும் இருப்பதுபோல, நமக்கும் இந்த 3 நிலைகளும் இருக்கிறது, அதனால் மிருகங்களால் செய்ய முடியாதவைகளையும் நம்மால் செய்திட முடியும்.

**ஆன்கர்பெர்க்:** நீங்கள் ஒரு விசேஷமான சிருஷ்டிப்புதான். மனிதன் கண்டுபிடிக்கப்படவில்லை, தேவனை பொறுத்தவரையில், தேவனே அவனை ஜீவனடைய செய்தார்.

**ராஸ்:** வெல், இந்த பகுதியில் பயன்படுத்தப்பட்ட வார்த்தையை பாருங்கள் தேவன் மனிதனை சிருஷ்டித்தார் தேவன் மனிதனை உருவாக்கினார். சரி, தேவன் நம்மை உருவாக்கினார் என்று சொல்லும்போது அவர் நம்மை பூமியின் மண்ணினாலே உருவாக்கினார். மண்ணானது ஏற்கனவே

இருந்தது, ஆனால் அந்த மண்ணை நம்முடைய சரீரமாக தேவன் வனைந்து உருமாற்றினார். ஆனால் நமக்குள் இருக்கும் ஆவியானது இதுவரை இல்லாத புதுமையான ஒன்றாக இருக்கிறது. அதனால் தான் சிருஷ்டிப்பு என்ற வார்த்தையை பார்க்கிறீர்கள். எனவே இது இதுவரை பூமியில் இல்லாத ஒரு விஷயமாக இருக்கிறது.

**ஆன்கர்பெர்க்:** யா, 3 முறை மட்டுமே ஆதியாகமம் 1ல், சரிதானே, பார என்ற வார்த்தையை தேவன் 3 முறை உபயோகிக்கிறாரே? எதற்காக?

**ராஸ்:** பாரா என்ற வார்த்தை ஆதியாகமத்தில் இதுவரை இல்லாத ஒன்றை புத்தம் புதியதாக உண்டாக்கப்படுவதர்க்கு மட்டுமே பயன்படுத்தப்படுகிறது. அதை ஆதியாகமம் 1:1ல் முதல்முறையாக பார்க்கலாம் தேவன் இந்த இயற்கையான பிரபஞ்சத்தை உருவாக்கினார். இரண்டாவது முறையாக சிருஷ்டிப்பின் ஐந்தாம் நாளில் பயன்படுத்தப்பட்டுள்ளது வெறும் சரீரத்தை மட்டும் கொண்ட மிருகங்களை தேவன் உண்டாக்கவில்லை, சரீரமும் ஆத்துமாவும் இருந்தது. அந்த ஆத்திம பகுதிதான் புத்தம் புதிய படைப்பு. அடுத்தது கடைசியாக, மனிதர்கள் சரீரம் ஆவி ஆத்துமாவை கொண்டிருந்தனர். இங்கு ஆவிதான் புதிய படைப்பாகும்.

**ஆன்கர்பெர்க்:** ஆல்ரைட், ஹக், இந்த தகவல்களை ஜனங்களுக்கு எதற்காக சொல்லுகிறோம் என்ற விஷயத்தை சுருக்கமாக சொல்லிடலாம். இந்த எல்லா நிகழ்வுகளும் இருக்கிறது, அவற்றை மறுபடியும் சுருக்கமாக சொல்லுங்கள், இவையனைத்தும் ஆறாம் நாளில் நடப்பவைகளாக இருக்கின்றது. அந்த நிகழ்வுகள் என்ன அவை ஏன் 24 மணி நேர காலத்திற்குள் நடத்தப்பட முடியாது?

**ராஸ்:** வெல், ஆதியாகமம் 1 மனுஷனில் ஆணும் பெண்ணும் இருவரும் ஆறாம் நாளில் உருவாக்கப்பட்டதாக சொல்லப்பட்டிருக்கிறது. ஆதியாகமம் இரண்டாம் அதிகாரத்தில் பார்க்கும்போது ஏதேன் தோட்டத்திற்கு வெளியில் ஆதாம் முதலில் உருவாக்காப்பட்டான். தேவன் அவனை ஏதேன் தோட்டத்தில் வைத்தார். இந்த மரங்கள் அனைத்தும் வளர்வதற்கு நீண்ட காலமாகியிருக்கும். அவன் தோட்டத்தை பன்படுத்துகிரார்ன், இந்த மரங்கள் செடிகளினால் தேவன் தனக்கு அருளிய அனைத்தையும் கண்டு வியந்துபோயிருப்பான், அவற்றை ஆனந்தமாக அனுபவித்தான், தோட்டத்தை பராமரிப்பதைவிட வாழ்வில் வேறு விஷயங்கள் இருக்கும் என நினைத்தான்.

அதற்க்கு தேவன், ஓகே, இப்ப நீ இயற்கையான சிருஷ்டிப்புகளுடன் மட்டும் தொடர்புடையவனாக இருப்பதை விடை, ஆத்துமாவையும் உடையவைகளோடு தொடர்புகொள்ள வேண்டும் என்றார், அது நேபிஷ் விலங்குகளை குறிக்கிறது, தேவன் உண்டாக்கிய மிருகங்கள் அதற்க்கு மனம், சித்தம் உணர்ச்சிகள்

இருந்ததால் ஆதாமுடன் தொடர்புகொண்டன, அவனோடு பிணைக்கப்பட்டிருந்தது. அவனை பிரியப்படுத்தவும் அவனுக்கு சேவை செய்யவும் தேவன் ஒவ்வொன்றையும் தனிப்பட்ட வித்தத்தில் வடிவமைத்திருப்பதை பார்க்கிறான். இங்கு ஆயிரக்கணக்கான ஜீவா ஜந்துக்கள் இருக்கிறது. தேவன் இவை ஒவ்வொன்றையும் உண்டாக்கி இருக்கும் வித்தத்தை அறிந்து சரியான வித்தத்தில் அவை ஒவ்வொன்றிற்கும் பெயரிட ஆதாமுக்கு நிச்சயம் பல நாட்களாகியிருக்கும்.

அவற்றை அவன் முடித்தபிறகு, வேதம் சொல்கிறது ஆதாம் தனிமையாயிருப்பதை தேவன் கண்டார், இந்த ஜீவஜந்துக்களுடன் அவன் தொடர்புகொள்ளகூடியவனாக இருந்தபோதிலும் ஏதோவொன்று குறைவுபட்டது. அதன் பிறகு தேவன் ஆதாமுக்கு அயர்ந்தத நித்திரையை வரப்பண்ணினார். அந்த அறுவை சிகிச்சையிலிருந்து சுகமடைகிறான். ஒரு புதிய சிருஷ்டிப்பை பார்த்ததும்  ஆதாமுடைய வாயிலிருந்து வந்த வார்த்தை மூல பாஷையில் , 'ஹாபா'ஆம்" "கடைசியா வந்தாச்சு!" எனவே இந்த பகுதி ஆதாமை உருவாகியதர்க்கும் ஏவாளை உருவாகியதர்க்கும் இடையிலான காலநேரத்தை தெளிவாக எடுத்துரைக்கிறது. மேலும் தேவன் ஆதாமிற்கு எப்படி மற்ற உயிரினங்களுடன் தொடர்புகொள்ளவது நடப்பது என்பதை குறித்து கற்றுக்கொடுப்பதையும் ஆதியாகம் 1 ம் அதிகாரத்தில் பார்க்க முடியும்.

**ஆன்கர்பெர்க்:** ஹக், நீங்க தேவனை ஏற்றுக்கொள்வதற்கு மின்பு இந்த காரியங்கள் உங்களுக்கு எப்படிஇருந்தது, எப்படியோ இந்த ஆதியாகமம் 1ம் அதிகாரத்தின் தகவல்களை நீங்கள் பெற்றிருப்பீர்கள். இங்களுடையா பின்னணி முழுவதும் வானியல் தான், எப்படி இதை கடந்து வந்தீர்கள்? அந்த நிலையை கடந்து இயேசு கிறிஸ்துதான் உங்கள் பாவங்களை நீக்கும் இரட்சகர் என்று விசுவாசிக்க உங்களுக்கு இந்த அதிகாரத்தில் உறுதியளித்த விஷயம் எது?

**ராஸ்:** வெல், ஆதியாகமம் 1 மற்றும் 2ம் அதிகாரத்தை பார்த்தபோது இந்த நிகழ்வுகளின் பட்டியல் விஞ்யானத்தோடு சரியாக பொருந்தியிருந்தது. அதனுடைய விளக்கம் விஞ்யான பதிவிகளோடு ஒத்திருந்தது. இது பல ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பு எழுதப்பட்டது என்பதை உணர்ந்த்தேன். இவை மனிதனுடைய ஆற்றல் சக்திக்கும் மேலான விஞ்யான தகவல்களை அளிக்கிறது என்பதை புரிந்துகொண்டேன். இதுதான் மோசே இந்த பிரபஞ்சத்தை  உண்டாக்கியவருடைய உந்துதலினால் மட்டுமே இவற்றை எழுதியிருப்பார் என்ற உறுதியை எனக்கு அளித்தது. வேதத்தில் நான் காணும் காரியங்கள் அனைத்தும் வெறும் வார்த்தைகள் மட்டுமல்ல, அவை முற்றிலும் சத்தியமானவைகள். எனவே தான், வேதாகமம் தேவனுடைய மாறாத வார்த்தைகள் என்பதை விளங்கிகொண்ட பிறகு, மற்ற எண்ணங்கள் என்னைவிட்டு அகல ஆதியாகம் 3ல் சொல்லப்பட்டதை நான் புரிந்துகொண்டேன், தேவனுடைய எதிராளியும் மனுக்குலத்தின் எதிராளியுமான சர்ப்பத்தின் தலையை ஸ்திரீயின் வித்தானவர் நசுக்கிடுவார், புதிய ஏற்ப்பாட்டில் இந்த பிரபஞ்சத்தை உண்டாக்கினவர் தாமே மனிதனாக அவதரித்து

சிருஷ்டிகரோடு நாம் மறுபடியும் ஐக்கியப்ப்பட தேவையான பலியை செலுத்தினார். அதுதான் கிதியோன் வேதத்தில் என்னுடைய பெயரை எழுதவைத்தது, என் வாழ்வை இயேசு கிறிஸ்துவுக்கு கொடுத்தேன்.

**ஆன்கர்பெர்க்:** 40 நொடிகளில் சுவிசேஷத்தின் செய்தி என்னவென்று சொல்லுங்க

**ராஸ்:** சுவிசேஷத்தின் செய்தி இதுதான் எல்லாவற்றையும் உண்டாக்கியவர் இந்த பூமிக்கு இறங்கி வந்து தாழ்மையின் சொருபமாக விளங்கினார், நாம் தேவனிடத்தில் சேரும்படி வந்தார், அவர் தம்மையே தியாகபளியாக தந்தார், நாம் தேவனிடம் கிட்டி சேர்ந்திட தேவனுக்கு விரோதமான நம்முடைய மீறுதலுக்கு அவர் விலைகிரையம் செலுத்தினார் மேலும் நம்முடைய அநீதிக்கு பதிலாக அவருடைய நீதியை நமக்கு அவர் அருளினார், நம்மை உருவாக்கின தேவனை நாம் படிப்படியாக பின்தொடரும்படி அவர் நம்முடைய வாழ்க்கையை நடத்துகிறவராக இருக்கிறார்.

**ஆன்கர்பெர்க்:** நீங்கள், இதை, கேட்டுக்கொண்டிருக்கிரவர்கள் இன்றைக்கு இயேசுவை உங்கள் வாழ்க்கையில் வரவேற்க விருப்பமுள்ளவர்களாக இருந்தால், உங்களுக்கு வேதம் பல விஷயங்களை எடுத்துரைக்கிறது, ஆனால் உண்மையில், "அவருடைய நாமத்தை நோக்கி கூப்பிடுகிற யாராக இருந்தாலும்," நீங்கள் தேவனுக்கு முன்பாக பூரனராக நிற்ப்பதற்கு தேவையான அனைத்தையும் அவர் செய்து முடித்துவிட்டார் என்ற நம்பிக்கையோடு அவரை விசுவாசித்தால், பாவம் பழி என்றில்லாமல், ஓகே, நீங்கள் கிறிஸ்துவை விசுவாசித்தால் அவரால் அவற்றை அகற்ற முடியும், அவர் அகற்றிடுவார். உங்களை இரட்ச்ப்பார். கிறிஸ்து உங்கள் வாழ்வில் வருவார். உங்களுடைய வாழ்வில் தேவ ஆவியானவரை தந்திடுவார் அவர் உங்களுக்கு புதிய விருப்பங்களை அளித்து உங்களில் மாற்றத்தை உண்டாக்கிடுவார். அந்த ஐக்கியத்தை நீங்கள் பெரும்படியாக விரும்புகிறோம். இது அறிவுபூர்வமான காரியமட்டுமல்ல. இது ஜீவனுள்ள தேவனோடு கொண்டிருக்கும் அனுபவமும் அன்றாடம் கிறிஸ்துவோடு நடப்பதுமாகும்.

இது, ஒரு அருமையான காரியம்தான். இன்னும் நான்காம் நாளின் காரியத்தை பார்க்கவில்லை. வெல், அதை குறித்தும் நாம் பார்க்க இருக்கிறோம், இயற்கையின் பதிவுகள் வசனத்தின் பதிவுகளுடன் ஒத்திருக்கிறதா என்பதையும் நாம் பார்க்க இருக்கிறோம். வேறுவார்த்தைகளில் சொன்னால், தேவனும் வேதாகமும், இயற்கையில் நம்மிடம் இருக்கும் பதிவுகளுடன் ஒத்திருக்கிறதா? இவை இரண்டையும் ஒரே ஆக்கியோன் தான் நமக்கு அளிக்கிறாரா? அதைக்குறித்து நாம் பேசிட இருக்கிறோம். டாக்டர் வால்டர் கெய்சர் சொல்வதையும் கேட்க இருக்கிறோம். ஆதாம் பாவம் செய்தபோது ந்சுற்றி நடந்த விஷயங்களை பற்றியும் ஒருசில காரியங்களை பார்க்க இருக்கிறோம். இது எப்பக்டி உலகை பாத்தித்தது, இது தொடர்பான சுவாரஸ்யமான விஷயங்கள் இருக்கிறது. அடுத்த வார நிகழ்ச்சியை தவற மாட்டீர்கள் என நம்புகிறேன்.

*****

எங்களுடைய தொலைக்காட்சி நிகழ்சிகளை காண

இலவச ஜான் அன்கெர்பெர்க் நிகழ்ச்சி ஆப்பை பதிவிறக்கம் செய்திடுங்கள்.

இயேசு கிறிஸ்துவை ஏற்றுகொள்வதற்கான ஜெபம் @JAshow.org

@2015 A.T.R.I.